பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 02 2026** **6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி மும்பையில் இன்று பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோனை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேசுகிறார்.

2. நார்வே சென்றுள்ள மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அந்நாட்டு நிதியமைச்சருடன் வர்த்தக மேம்பாடு குறித்து விவாதித்தார்.

3. தமிழக சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டுக்கான இடைக்கால பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

4. மக்களின் உடல்நிலையை பாதிக்கும் கொசு மற்றும் தெருநாய் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதில் திமுக அரசு அலட்சியம் காட்டுவதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5. வளர்ந்து வரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்திய ஏ அணி இன்று நேபாளை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மும்பையில் இன்று பிரான்ஸ் அதிபர் திரு. இம்மானுவேல் மேக்ரோனை சந்தித்துப் பேசுகிறார்.

மக்கள் மாளிகையில் இன்று பிற்பகல் நடைபெற உள்ள இந்த சந்திப்பின்போது இந்தியா - பிரான்ஸ் இடையேயான கூட்டாண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர்கள் விவாதிக்க உள்ளனர்.

புதிய மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவர்கள் விவாதிக்க உள்ளனர்.

பிராந்திய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்து பிரதமரும், பிரான்ஸ் அதிபரும் தங்கள் கருத்துகளை பரிமாறிக்கொள்ள உள்ளனர்.

அதைத் தொடர்ந்து இன்று மாலை இந்தியா-பிரான்ஸ் புதுமைக் கண்டுபிடிப்புகள் ஆண்டுக் கூட்டத்தை இரு தலைவர்களும் தொடங்கி வைக்க உள்ளனர்.

இதில் இருநாட்டு வர்த்தக தலைவர்கள், புத்தொழில் நிறுவன பிரதிநிதிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இதர கண்டுபிடிப்பாளர்கள் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்திய செயற்கை நுண்ணறிவு உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அழைப்பின்பேரில் இந்தியாவில்

இன்று முதல் 3 நாட்கள் திரு. இம்மானுவேல் மேக்ரோன் பயணம் மேற்கொள்கிறார்.

<<<<>>>>

நார்வே சென்றுள்ள மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அந்நாட்டு நிதியமைச்சர் திரு. Jensstoltenberg-ஐ சந்தித்துப் பேசினார்.

அப்போது வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டாண்மை ஒப்பந்தம், குறிப்பாக நீலப் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரம் மற்றும் ஓய்வூதிய நிதிகள் போன்றவற்றில் இணைந்து செயல்படுவதென இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி முதலீடு செய்வதற்கும், வளர்ச்சியடைவதற்கும் பெரும் வாய்ப்புகளை அளிப்பதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

சூரியசக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க எரிச்கதி துறையில் இணைந்து செயல்படுவது குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

அப்போது பேசிய நார்வே நிதியமைச்சர், இந்த ஆண்டு இறுதியில் நார்வே வருகை தர உள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பயணம் மூலம் இரு நாடுகளுக்கு இடையேயான

ஒத்துழைப்பு மேலும் வலுப்பெறும் என்று தாம் நம்புவதாக குறிப்பிட்டார்.

<<<<>>>>

புதிய ஆதார் செயலியை 10 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன்படுத்துவதாக இந்திய தனித்துவ அடையாள ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாள்தோறும் சராசரியாக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பதிவிறக்கங்கள் மூலம் இந்தப் புதிய செயலியில் இதுவரை ஒரு கோடியே 40 லட்சம் பதிவிறக்கங்கள் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பாதுகாப்பான மற்றும் வசதிமிக்க மின்னணு அடையாள சேவைகளில் வளர்ந்து வரும் நம்பிக்கையை இது பிரதிபலிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய செயலி மூலம் 10 லட்சம் பேர் தங்களது மொபைல் எண்ணை புதுப்பித்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவையில் வரும் நிதியாண்டுக்கான இடைக்கால பட்ஜெட் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

மாநில நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இதைத் தாக்கல் செய்கிறார்.

இந்தக் கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு தலைமையில் நடைபெறும் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட உள்ளது.

இது சட்டப்பேரவையின் கடைசி கூட்டத்தொடர் என்பதால் இடைக்கால பட்ஜெட் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக மாநில திட்டக் குழு தயாரித்துள்ள வரும் நிதியாண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் நேற்று வெளியிட்டார்.

கடந்த 5 ஆண்டுக்கான மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிப் பாதையை இந்த ஆய்வறிக்கை எடுத்துரைப்பதாகவும், 10 பிரிவுகளில் பொருளாதாரத்தின் பல்வேறு முக்கிய அம்சங்கள் மற்றும்...

... அது செயல்பட்டதன் விதம் குறித்தும் இதில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டதாகவும் மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் இருந்து பல்வேறு காலகட்டங்களில் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் தமிழர்கள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு தரவுகளை முழுமையாக ஆவணப்படுத்தும் வகையில் தமிழர் தடம் என்ற புதிய இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.

சென்னை தலைமைச் செயலகத்தில் இதை வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. நாசர் தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் மாலத்தீவு, மொரீஷயஸ், இந்தோனேஷியா உள்ளிட்ட 8 நாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கு கலைகளை கற்பிக்க தேர்ந்தெடுக்கப்பட்ட 10 கலைப் பயிற்சியாளர்களுக்கு பணி ஆணைகளையும் வழங்கினார்.

<<<<>>>>

மக்களின் உடல்நிலையை பாதிக்கும் கொசு மற்றும் தெருநாய் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதில் திமுக அரசு அலட்சியம்

காட்டுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்படாததன் காரணமாக சென்னையில் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ளதாக கூறியுள்ளார்.

மாநிலத்தில் கொசு ஒழிப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

நீலகிரி மண்டலத்தில் மட்டுமே காணப்படும் அரியவகை பறவைகள் குறித்து **"Wings of Whispers"** என்ற ஆவணப்படம் வெளியிடப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக **21** வகையான பறவைகள் கண்டறிப்பட்டுள்ளதாகவும், இந்த உள்ளூர் பறவைகள் குறித்தும், அவற்றை பாதுகாப்பதன் அவசியம் குறித்தும் பள்ளி மாணவர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் இந்த ஆவணப்படம் வெளியிடப்பட்டுள்ளதாக அப்படத்தின் தயாரிப்புக் குழு ஒருங்கிணைப்பாளர் திரு. ராஜேஷ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**(Sound Byte — Rajesh — 30 Sec)**

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பங்களாதேஷ் புதிய பிரதமராக பங்களாதேஷ் தேசிய கட்சி தலைவர் திரு. தாரிக் ரஹ்மான் இன்று பதவியேற்கிறார்.

--------------

இலங்கையில் டித்வா புயலால் சேதமடைந்துள்ள பகுதிகளை பார்வையிட்டு மதிப்பிடுவதற்காக சர்வதேச செலாவணி நிதி மேலாண்மை பிரதிநிதிகள் குழு கொழும்பு சென்றுள்ளது.

--------------

விசாகப்பட்டினத்தில் இன்றும், நாளையும் நடைபெறும் சர்வதேச கடற்படைப் பயிற்சியை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு பார்வையிடுகிறார்.

--------------

குஜராத் மாநிலம் காந்திநகரில் மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த கூட்டுறவுத்துறை அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

-------------

அரசு கருவூலத்தில் இருந்து ஒரு லட்சத்து 28 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலா தங்கம் காணாமல் போய்விட்டதாக பரவும் செய்திகள் தவறானது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

-------------

மதுரை தமுக்கம் மைதானம் முதல் நெல்பேட்டை அண்ணா சிலை வரை கட்டப்பட்டுள்ள பாலத்திற்கு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மேம்பாலம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

-------------

சென்னை வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட 25 கல்லூரிகளைச் சேர்ந்த ஆயிரத்து 698 மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினிகளை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணி வழங்கினார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்டம் சிறுகாவேரிப்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் திரு. ஆர். காந்தி 330 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

--------------

தூத்துக்குடி சிப்காட் தொழில்துறை பூங்கா குறித்து பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு. இளம் பகவத் தலைமையில் நடைபெற்றது.

--------------

திருவள்ளூரில் நடைபெற்ற மக்கள் குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 678 கோரிக்கை மனுக்கள் மீது உரிய தீர்வு காணுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சுரேஷ் உத்தரவிட்டார்.

--------------

சென்னை ஈக்காட்டுத்தாங்கலில் உள்ள சிட்கோ தொழிற்பேட்டையில் தொழில்முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி இம்மாதம் 23ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

--------------

*விளையாட்டுச் செய்திகள்*

வளர்ந்து வரும் வீரர்களுக்கான ஆசிய கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்திய ஏ அணி இன்று நேபாளை எதிர்கொள்கிறது.

பாங்காக்கில் நடைபெற உள்ள இப்போட்டி காலை 8 மணிக்கு தொடங்குகிறது.

--------------

உலகக் கோப்பை ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வென்று சூப்பர்-8 சுற்றுக்கு முன்னேறியது.

------------

ஐ.எஸ்.எல். கால்பந்துப் போட்டியில் ஈஸ்ட் பெங்கால் அணி 3-0 என்ற கோல் கணக்கில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை வென்றது.

**<<<<The End>>>>**